நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.எண்.01/2017

2018ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.8 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பூபதி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: இளவரசன் வயது:- 45

த/பெ.(அ)க.பெ: தொழில்: உதவி ஆயவாளர்

ஊர் : வேலூர் சமயம்: இந்து

வட்டம் : ஜாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:

நான் தற்போது நக்சல் தடுப்பு சிறப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் ஆண்டு குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 06.10.2015ம்தேதி 17.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது ஆண்டியப்பனூார் கிராம நிர்வாக அலுவலர் திரு. தீலப் அவர்கள் நிலையம் சேர்ந்து கொடுத்த புகார் மனுவினை பெற்று, நிலைய குற்ற எண். 157/2015 பிரிவு 447, 188, 294(பி), 353 இதச ன் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா. ஆ.8 ஆகும். பிறகு அன்றே 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் திரு. சக்திவேல் மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவஇடத்தினை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்தேன். பார்வைமகஜர் அ.த.சா.ஆ. 9 ஆகும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ. 10 ஆகும். பின்பு ஆண்டியப்பனூார் கிராம நிர்வாக அலுவலர் திரு. தீலிப், வருவாய் அலுவலர் திரு. நவநீதம், மண்டல துணை வட்டாட்சியர் வாணியம்பாடி தாலுக்கா திருமதி. சுமதி, ஆண்டியப்பனூரை சேர்ந்த திருமதி. விமலா, அந்த கிராம உதவியாளர் திரு. முத்துசாமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே எதிரிகளை மிட்டூர் பெட்ரோல் பங்கிடம் 19.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்புவித்தேன். பின்பு எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். x

வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவு 447, 188, 294(பி), 353 இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துக்கொண்டேன்.

எ.த.கு.வி:-

சம்பவம் குறித்து முன்கூட்டியே போன் மூலம் தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. அப்போது சம்பவ இடம் பார்க்கவில்லை.அவ்வாறு சாட்சிகள் சொல்லியிருந்தால் அது தவறு. சம்பவ இடம் மார்க்கெட், கடைகள் அதிகம் உள்ள இடம் என்றால் இல்லை பேருந்து நிறுத்தம் ஆகும் நடைபாதைகள் கடைகள் உள்ளது. அந்த நடைபாதை கடைகள் அகற்ற கோரி மனு கொடுத்திருந்தார்களா என்றால் இல்லை.சைக்கிள் போடுவதற்கு மறுப்பு தெரிவித்து புகார் ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. புகாரினை பெற்றுக்கொண்டு, சம்பவ இடம் சென்று அங்கு ஆவணங்கள் தயாரிக்கும் போது, அங்கு இருந்த வியாபாரிகளை சாட்சிகளாக போடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் அரசுக்கு சொந்தமான இடம் என சுட்டுகாட்டியுள்ளேன் என்றால் சரிதான். வரைபடத்தில் அதை வட்டமிட்டு காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வட்டமிட்டுள்ள இடத்தில் கல்தூண் காட்டியுள்ளேனா என்றால் காட்டப்பட்டுள்ளது.சம்பவ இடம் திருப்பத்தூர் - ஆலங்காயம் செல்லும் சாலையில் என காட்டியுள்ளேன் என்றால் சரிதான். காட்டப்பட்டள்ள இரண்டு கற்களை நான் கைப்பற்றவில்லை. அதனை சுற்றி முள் வேலி காட்டவில்லை. சம்பவ இடம் மெயின் ரோடில் காட்டிவிட்டு, வரைப்பட்ட இட்டு காட்டப்பட்ட இடத்தில் கல் தூண் காட்டிவிட்டு, இது போன்ற சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அதை சர்வே எண்ணில் அரசு நிலத்திற்கு செல்லும் வழியில் தான் உள்ளது. சம்பவ இடம் இரண்டு வீடுகளுக்கு சம்பந்தப்பட்ட வழி என்றால் சரிதான். அது இரண்டு வீடுகளின் கூரைகள் உள்ளது என்றால் சரிதான். அதில் பாதி ஒருவருடையது. மற்றொரு பாதி மற்றொருயுடையது என்பதால் அந்த பகுதியில் கல் போட்டதாக மேற்படி வீட்டுக்காரர்கள் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. அந்த இடைப்பட்ட பகுதியில் சம்பவம் நடந்ததாக அ.த.சா.ஆ. 3 புகைப்படத்தில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.இரண்டு வீடுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் மேற்படி வீட்டுக்காரர்கள் புகார் கொடுத்துள்ளனாரா என்றால் இல்லை. சம்பவ இடம் அரசுக்கு சொந்தமான மந்தைவெளி புறம் போக்கு இடம் ஆகும். அவ்வாறு அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமைப்பு மேற்படி வீட்டுக்காரர்களை சாட்சியாக போட்டுள்ளேனா என்றால்

இல்லை. மேற்படி பகுதி அரசுக்கு சொந்தமானது என கிராம நிர்வாக அலுவலர் வரைப்படம் காட்டியுள்ளாரா என்றால் அந்த இடம் முழுபகுதியும் அரசுக்கு சொந்தமானது என காட்டியுள்ளனர். அவ்வாறு ஒரே இடத்தில் உள்ள மற்ற நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.இருவீட்டுக்கு  இடையில் சம்பவம் நடந்துள்ள நிலையில், அரசு புறம் போக்கு இடம் என காட்டிவிட்டு, சம்பவ இடம் வேறு இடம் என காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வீடுகள் இடைப்பட்ட  காட்டப்பட்ட இடம் அரசுக்கு சொந்தமான மந்தைவெளி ஆகும்.அவ்வாறு இடைப்பட்ட பகுதி சம்பவ இடம் என காட்டவில்லை என சொன்னால் சரியல்ல. காட்டியுள்ளேன். சம்பவ இடமாக காட்டியுள்ள இடத்திற்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.  அரசு அதிகாரிகளை எங்கு விசாரித்தேன் என்றால்  ஆண்டியப்பனூரில்  சம்பவ இடத்தில் விசாரித்ததேன்.  அவ்வாறு விசாரித்ததில் ஒருவரின் வாக்குமூலத்தை கைப்பட எழுதியும், மற்றொருவரின் வாக்குமூலத்தை தட்டச்சு செய்துள்ளேன்என்றால் சரிதான். அவ்வாறு ஒரே நேரத்தில் விசாரிக்க வாய்ப்பில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். எதிரிகள் எனக்கு முன் பின் அறிமுகம் இல்லாத நபர்கள் என்றால் சரியல்ல. எனக்கு தெரியும். எதிரிகளை கைது செய்த இடத்தில் தான் கைதுகுறிப்பானை, கைது அட்டை தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த இடத்தில் எதிரிகளின் உறவினர்கள் இருந்திருக்க வாய்பில்லை என்றால் எதிரிகளை கைது செய்த பின்பு காவல் நிலையம் அழைத்து வந்து உறவினர்களுக்கு தகவல் கொடுத்தேன்.அதனால் சம்பவ இடத்தில் கைது செய்து ஆவணத்தை தயார் செய்தேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நடைபாதை கடைகளை அகற்ற வேண்டி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க சிபாரிசு செய்து நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரியல்ல. சம்பவ குறித்து, புகாரில் எதிரிகள்  பணி செய்த அதிகாரிகளை யார் யாரை  தடுத்தார்கள் என சொல்லியுள்ளார்களா என்றால்  சொல்லியுள்ளனர்.  ஆக்கிரமைப்பு செய்ததை அதிகாரிகள் கேட்பது அவர்களது பணிதான். அவ்வாறு கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆக்கிரமைப்பு எதுவும் செய்யவில்லை என்றும், ஆக்கிரமைப்பு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும், சம்பவ இடத்திற்கும் அரசு புறம்போக்கு இடத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நடைபாதை வியாபாரிகளுக்கு ஆதரவாக வந்ததால் அதிகாரிகள் தவறான புகாரின் கொடுத்து, அதன் பேரில் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறான நடவடிக்கை எடுத்து தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல.

ம.வி:-

இல்லை